மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.107/2019

வாக்குமூலம். பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நிரஞ்சனா | ஜாதி | |
| க/பெ. | ஆத்மநாதன் (எ) குமார் | மதம் | |
| கிராமம் | | தொழில் | ஏகணிவயல் ஊராட்சி கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுகா | | வயது | 32 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 19.07.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் 3-ம் பிரதிவாதி / பிரதிவாதி தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். தாவா சொத்துக்களுக்கான Final சிட்டா உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் வாதி தரப்பில் கோபுர முத்திரை இல்லை என்று ஆட்சேபிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான புலப்படம் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது ஆட்சேபனையுடன் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.